**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 03/2019**

PW 1 – வினோத்குமார், த/பெ. குஷல்சந்த் செயின்
நாள் – 06.11.2023.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

13.04.1998-ல் எனது தகப்பனாருக்கு அவரது தாயார் எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட உயிலின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது.) 18.10.2007 தேதியிட்ட எனது தந்தை வழி பாட்டியின் இறப்பு சான்றின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 12.03.1985 தேதியிட்ட எனது தந்தை வழி பாட்டி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 13.03.1985 தேதியிட்ட எனது தந்தை வழி பாட்டி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 14.03.1985 தேதியிட்ட எனது தந்தை வழி பாட்டி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 31.07.1953 தேதியிட்ட கிரய ஆவணத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் முறையே **நீ.ம.சா.ஆ.1. மற்றும் நீ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.01.2019 தேதியிட்ட எனது தகப்பனார் கொடுத்த புகார் மனுவின் கையிருப்பு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது.) புகார் மனு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.